நியதிகளும் நிபந்தனைகளும் - செல்லிடத்தொலைபேசி உபாயங்களிலான வியாபாரம்

இந்தத் தளத்தை, அதாவது ……… (இந்தத் தளம் /ஸ்டெலகொம் தளம்) அணுகுவதன்மூலம் அல்லது பயன்படுத்துவதன்மூலம் கீழேயுள்ள நியதிநிபந்தனைகளினால் பிணிக்கப்படுவதற்கு நீர் உடன்படுகின்றீர். இவ்வுடன்படிக்கை ஸ்டெலகொம் (பிறைவேட்) லிமிடெட்டினால் (ஸ்டெலகொம்) எந்நேரத்திலும் திரிபுபடுத்தப்படலாமென்பதுடன், அத்தகைய திரிபுகள், இந்தத் தளத்தின்மீது திரிபுபடுத்தப்பட்ட உடன்படிக்கையைப் பதிவதன்மேல் உடனடியாகப் பயனுறுதலும் வேண்டும்.

1. இந்தத் தளத்தைப் பயன்படுத்துவதற்கு அல்லது இந்தத் தளத்தினால் முனையப்பட்ட ஏதேனும் சேவையைப் பயன்படுத்துவதற்கு உரித்தாவதற்கென நீர் 18 வயதைக் கொண்டவராக அல்லது அதற்குமேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தத் தளத்துக்கு உம்மால் வழங்கப்பட்ட எல்லாத் தகவல்களும் உண்மையானவையும் செம்மையானவையும் என்றும் உமக்கு ஏதேனும் சேவையை முனையும் நோக்கத்துக்காக இந்தத் தளத்தினால் நம்பப்படலாம் என்றும் நீர் நம்புறுதிசெய்கின்றீர். உமது தகவல்களில் (இந்தத் தளத்துக்கு உம்மால் வழங்கப்படக்கூடிய தகவல்கள்) சொத்தாண்மை உரிமைகளை நீர் கொண்டிருப்பதில்லை என நீர் விளங்கிக்கொண்டு ஒப்புக்கொள்கின்றீரென்பதுடன், உமது தகவல்களை அந்தரங்கமானவையாக வைத்திருப்பதற்கான ஏதேனும் வெளிப்படையான அல்லது உட்கிடையான கடப்பாட்டினால் ஸ்டெலகொம் பிணிக்கப்பட்டதுமல்ல.

3. வரையறையின்றி, பின்வரும் செயற்பாடுகளுட்பட, இந்தத் தளத்தின் பாதுகாப்பை நீர் மீறுதலோ அல்லது மீறுவதற்கு எத்தனித்தலோ ஆகாது:

   i. உமக்காக உட்கருதப்படாத தரவுகளை அணுகுதல் அல்லது அணுகுவதற்கு நீர் அதிகாரமளிக்கப்படாத பரிமாறி ஒன்றினுட் பதிகைசெய்தல்;

   ii. முறையான அதிகாரவளிப்பின்றி ஒரு முறைமையின் அல்லது வலையமைப்பின் வடுப்பாட்டை நுனித்தாராய்வதற்கு, நுணுகி நோக்குவதற்கு அல்லது பரீட்சிப்பதற்கு, அல்லது பாதுகாப்பு அல்லது மெய்யென்று உறுதிப்படுத்தல் வழிமுறைகளை மீறுவதற்கு எத்தனித்தல்;

   iii. வரையறையின்றி, இந்தத் தளத்துக்கு நச்சுநிரல் ஒன்றை உட்செலுத்துதல், மிகைச்சுமையேற்றல், ‘‘பெரும்பாய்ச்சல் செய்தல்’’, ‘‘வேண்டா அஞ்சல் அனுப்புதல்’’, ‘‘அதிகரித்த அஞ்சல் அனுப்புதல்’’ அல்லது அதனை ‘‘வீழ்ச்சியடையச் செய்தல்’’ என்ற வழிவகைகளினூடாக எவரேனும் பயன்படுத்துநர், கருவித்தொகுதி

அல்லது வலையமைப்புக்கான சேவையுடன் தலையிடுவதற்கு எத்தனித்தல்; அல்லது

முறைமையின் அல்லது வலையமைப்பின் பாதுகாப்புக்கான மீறுகைகள், குடியியல் அத்துடன்/அல்லது குற்றவியற் பொறுப்பை விளைவிக்கலாம்.

4. ஏதேனும் உபாயம் தொடர்பில் இந்தத் தளத்தினால் சுட்டிக்காட்டப்பட்ட ஏதேனும் பெறுமதி, உம்மால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையின்மீது வெறுமனே ஒரு மதிப்பீடாக அமைகின்றதுடன் அது தொடர்பில் ஸ்டெலகொம்மின்பாலான எத்தகையதுமான ஏதேனும் சட்டப்படியாகப் பிணிக்கின்ற கடப்பாட்டை உருவாக்கும்வகையில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய முனைவொன்றாகக் கொள்ளப்படுதலுமாகாது என நீர் உடன்படுகின்றீர்.

5. ஸ்டெலகொம் ஆனது, அதன் நிலையங்களுள் எவற்றிலும் ஏதேனும் உபாயம் உருப்படியாக முன்வைக்கப்பட்டதன்மேல் அதற்கு மீள்பெறுமதியிடுவதற்கும் அதன் அடிப்படையில், ஒன்றில் அத்தகைய உபாயத்தை நிராகரிப்பதற்கும் அல்லது அதுதொடர்பில் புதிய வியாபாரமுனைவைச் செய்வதற்குமான அத்தகைய உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டுமென நீர் உடன்பட்டு ஒப்புக்கொள்கின்றீர். ஸ்டெலகொம் ஆனது, நியாயமானதன்மைக்கு அல்லது பகுத்தறிவுக்கு அமைந்தொழுகுவதற்கான ஏதேனும் குறிப்பீடு அல்லது தேவைப்பாடு இன்றி அதன் சொந்தக் கட்டளைக்கற்களின் அடிப்படையின்மீது அத்தகைய மீள்பெறுமதியை நிறைவேற்றுவதற்கு உரித்துடையதாகவுள்ளதென நீர் மேலும் உடன்பட்டு ஒப்புக்கொள்கின்றீர்.

6. ஏதேனும் வியாபாரப்பெறுமதியானது, வியாபார ஊக்குவிப்புப் பங்காளர் நிலையங்களில் ஒரு புதிய செல்லிடத்தொலைபேசி உபாயத்தின் கொள்வனவுக்கெதிராக எதிரீடு செய்வதற்கு ஏற்புடையற்பாலதாகும்.

7. வியாபாரத்துக்கான செல்லிடத்தொலைபேசி உபாயங்கள் பின்வரும் கட்டளைக்கற்களை எதிர்கொண்டால் மட்டுமே அவை ஏற்றுக்கொள்ளப்படும்:

   அ. மேற்புறச் சேதம் இருத்தலாகாது, அதாவது உடைந்த மேலுறை, திரை, பாரதூரமான கீறல், தேய்வும் உராய்வும் அல்லது அரிமானம் இருத்தலாகாது.

   ஆ. திரவச் சேதம் இருத்தலாகாது.

இ. உபாயமானது செயலூக்கமாவதற்கும் செயலூக்கமற்றதாவதற்குமான சக்தியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஈ. ஏற்புடையற்பாலதான ஏதேனும் தொலைபேசிப் பூட்டு (கடவுச்சொல் அல்லது விரலடையாளம்) செயலிழந்ததாக்கப்படுதல் வேண்டும்.

உ. உபாயமானது வலுவூட்டப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

ஊ. உபாயத்துக்குச் சக்தியூட்டப்படும்போது, வெளிக்காட்டுகை தெளிவாகவும் முழுமையாகத் தென்படக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

எ. உபாயமானது காணாமற்போன அல்லது மூலப்பாகங்களாகவிராத பாகங்களைக் கொண்டிருத்தலாகாது. உபாயம் என்பது, மூல மின்கலத்தையும் சக்தி இசைவாக்கியையும், வடத்தையும் உள்ளடக்குகின்றது.

ஏ. உபாயமானது, ஏதேனும் ஏற்புடையற்பாலதான களவாடப்பட்ட அல்லது தொலைந்துபோன ஆதனத் தரவுத்தளத்தில் பதிவுசெய்யப்பட்டிருத்தலாகாது.

8. அப்பிள் உபாயத்துக்காக, “Find my iphone/iPAD” என்பதனை செயலிழந்ததாக்கி மீளநிலைப்படுத்துவதற்குமுன்னர் உபாயத்திலிருந்து கிளவுட் ID கணக்கை நீக்கிவிடவும். ஸ்டெலகொம்மினால் உமக்கு வழங்கப்படக்கூடிய வியாபார உறுதிச்சீட்டு, ஸ்டெலகொம் நிலையங்களுள் எவற்றிலும் புதியவொரு செல்லிடத்தொலைபேசி உபாயத்தைக் கொள்வனவுசெய்யும்போது அதன் செல்லுபடிக்காலப்பகுதியின்போது அது உம்மால் அல்லது உம்மால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளினால் மட்டுமே மீட்கப்படக்கூடியதாகவிருக்கும். தொலைந்துபோன அல்லது களவாடப்பட்ட வியாபார உறுதிச்சீட்டுக்கு ஸ்டெலகொம் பொறுப்பாகாது. ஏதேனும் வியாபார உறுதிச்சீட்டை மீட்கும்படி அல்லது காசுக்காகக் கொடுத்துமாற்றும்படி ஸ்டெலகொம்மைக் கோருவதற்கு எத்தகையதுமான ஏதேனும் சூழ்நிலையிலும் நீர் உரித்துடையவராதல் <u>ஆகாது.</u>

9. மற்றவர்களைப் பிழைவழி உய்ப்பதற்கு அல்லது ஏமாற்றுவதற்கு இந்தத் தளத்தில் முனையப்பட்ட ஏதேனும் சேவையைப் பயன்படுத்தப்படாதிருப்பதற்கு நீர் உடன்படுகின்றீர்.

10. இந்தத் தளத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் மதிப்பீட்டின் அல்லது தகவல்களின் செம்மையை அல்லது நம்பகமானதன்மையை ஸ்டெலகொம் குறிப்பீடுசெய்வதில்லை அல்லது நம்புறுதி செய்வதில்லை.

11. இந்தத் தளத்தைப் பயன்படுத்துவதிலிருந்து எவையேனும் குறிப்பிட்ட பெறுபேறுகளை ஸ்டெலகொம் உத்தரவாமளிக்கமுடியாது என்பதுடன், அவற்றுக்கு வாக்குறுதியளிப்பதுமில்லை.

12. ஸ்டெலகொம் அத்துடன்/அல்லது அதன் உரிமம் வழங்குநர்கள் இந்தத் தளத்தில் அடங்கியுள்ள புலமைச்சொத்துக்கும் பொருட்களுக்குமான எல்லா உரிமைகளையும் சொந்தமாக வைத்திருக்கின்றனர் என்பதுடன் அத்தகைய எல்லா உரிமைகளும் ஒதுக்கப்படுகின்றன.

13. இந்தத் தளம் அல்லது இந்தத் தளத்தினூடாகப் பொதுவாகக் கிடைக்கக்கூடியனவாக்கப்படும் சேவைகள் இடையீடின்றி இருக்குமென்றோ அல்லது பிழைகளற்றதாக இருக்குமென்றோ அல்லது சேவையிலான குறைபாடுகள் திருத்தப்படுமென்றோ ஸ்டெலகொம் நம்புறுதியெதனையும் வழங்குவதில்லை. இந்தத் தளம் அல்லது அதன் சேவைகள், தொற்று அல்லது நச்சுநிரல்கள், கிருமிகள், ட்றோஜன் ஹோசஸ் அல்லது மாசுபடுத்துகின்ற அல்லது அழித்துவிடுகின்ற பண்புகளை வெளிப்படுத்துகின்ற வேறு குறிமுறை அற்றதாகவுள்ளனவென்பதற்கு ஸ்டெலகொம் உத்தரவாதமளிக்கமுடியாது மற்றும் உத்தரவாதமளிப்பதில்லை அல்லது நம்புறுதிசெய்யமுடியாது மற்றும் நம்புறுதிசெய்வதில்லை என்பதையும் நீர் விளங்கிக்கொள்கின்றீர்.

14. சட்டத்தினால் தேவைப்பட்ட அளவுவரை தவிர, இந்தத் தளத்தைப் பயன்படுத்துவதன் விளைவாக எத்தகையனவுமான எவையேனும் சேதவீடுகளுக்கு (வரையறையின்றி, இடைநேர்விளைவான மற்றும் விளைவாந்தன்மையினவான சேதவீடுகள், இழக்கப்பட்ட இலாபங்கள், அல்லது இழக்கப்பட்ட தரவுகளிலிருந்து அல்லது வியாபார இடையீட்டிலிருந்து விளைகின்ற சேதவீடுகள் உட்பட) ஸ்டெலகொம் எப்பட்சத்திலும் ஆளாதலாகாது.

15. இந்தத் தளத்திலிருந்து அல்லது நீர் அதனைப் பயன்படுத்துவதிலிருந்து எழுகின்ற அல்லது அது சம்பந்தமான ஸ்டெலகொம்மின் அதிகபட்சப் பொறுப்பு, வழக்குக்காரணத்தைப் பொருட்படுத்தாது (ஒப்பந்தத்தில், தீங்கியலில், நம்புறுதி மீறுகையில் அல்லது வேறுவகையாக இருப்பினுஞ்சரி) 10,000/- ரூபாவை விஞ்சாது.

16. இவ்வுடன்படிக்கையின் ஏதேனும் பாகம் செல்லுபடியற்றதாகக் கொள்ளப்படின், அப்பாகம் இவ்வுடன்படிக்கையிலிருந்து துண்டிக்கப்பட்டு இவ்வுடன்படிக்கையின் எஞ்சியுள்ள பாகம் செல்லுபடியானதாகவும் வலுவுறுத்தப்படத்தக்கதாகவும் தொடர்ந்திருக்கும்.

17. இவ்வுடன்படிக்கைளை ஆளுகின்ற சட்டங்கள் இலங்கையிலுள்ள சட்டங்களாகும் என்பதுடன், கொழும்பில் அமருகின்ற இலங்கை நீதிமன்றங்களின் புறநீங்கலான நியாயாதிக்கத்துக்கும் நீர் அழிக்கமுடியாதவகையில் உட்படுகின்றீர்.